# ???? ?????????? ??????????




‘நமது ஈழநாடு’ வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் இம்மாதம் யாழ் மாவட்டத்ததை சேர்ந்த 10 முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

லண்டனில் உள்ள மனித உரிமை செயற்பாட்டாளரான திரு கீத் குலசேகரம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து நடாத்தப்பட்டு வரும் நமது ஈழநாடு வாழ்வாதார திட்டத்தின் கீழ் போரால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்கள் இனம்காணப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான உதவிகள் மாதாந்தம் வழங்கப்பட்டு வருவது குறிப்படத்தக்கது.

அந்த அடிப்படையில் இந்த (ஒக்டோபர்) மாதம் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் சுயதொழிலை ஊக்குவிப்பதற்கெனவும் பாதிக்கப்பட்ட 10 முன்னாள் போராளி மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு நமது ஈழநாடு குழுவினர் அடுத்த கட்ட உதவிகளை வழங்கிவைத்துள்ளனர். யாழ்ப்பாணம் சாவகச்சேரி, கோப்பாய் , தாவடி, மற்றும் பாசையூரை சேர்ந்த அந்த 10 குடும்பங்களுக்கும் கோழிப்பண்ணை வைப்பதற்கான கோழிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

திரு கீத் குலசேகரம் அவர்களுடன் திரு விமுக்தி ஞனதுங்க மதர ஆராட்சிகே மற்றும் திரு சாந்தலோஜித்தன் புயலேந்திரன் ஆகியோரும் இதற்கான நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஊடகவியலாளரான சோபிகா அவர்களின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு, இந்த வாழ்வாதார உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.




நமது
ஈழநாடு
திட்டம்
Prasa Enterprises
Lanka Pvt (Ltd)
Sathentholgithen
Puyalendran


நமது
ஈழநாடு
உதவித்திட்டம்
EMPOWERMENT SCHEME
Sponsored by
Prasa Enterprise
Lanka Pvt (Ltd)



நமது ஈழநாடு
வாழ்வாதார உதவித்திட்டம்
EMPOWERMENT SCHEME
Sponsored by
Sathentholgithen Puyalendran


நமது ஈழநாடு
Prasa Enterprises
Lanka Pvt (Ltd)




நமது
ஈழநாடு
EMPOWERMENT SCHEME
Sponsored
Sathentholgithen
Puyalendran


நமது
ஈழநாடு
வாழ்வாதார உதவித்திட்டம்
EMPOWERMENT SCHEME
Sponsored by
Prasa Enterprises
Lanka Pvt (Ltd)
Sathentholgithen
Puyalendran

# 11 ???????????????????????? ????????? – 3 ??????????? ?????????




பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பிரபு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் விசேட அதிரடிப்படை முகாம்கள் மூன்று முடக்கப்படவுள்ளன.

விசேட அதிரடிப்படை முகாமில் 11 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டமையினால், களனி, களுபோவில, ராஜகிரிய ஆகிய மூன்று முகாம்களே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

முகாமிற்கு மீன் வாங்குவதற்காக பேலியகொட மீன் சந்தைக்கு சென்ற போது இந்த வைரஸ் தொற்றியுள்ளதாக தெரியவந்துள்ளது.


இதேவேளை, மிரிஹான, சீதுவ மற்றும் நாரஹென்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸ் அதிகாரிகள் மூவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் 345 பேர் இதுவரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

---

# ????????? ???????? ???????????? ?????????

# ?????? ??????????? – ?????? ???????




சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய் தடுப்புத் தொடர்பான கட்டளைச் சட்டம் தொடர்பான வர்த்தமானியை வடக்கு மாகாணத்தில் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் பொது இடங்களில் சமூக இடைவெளியைப் பேணாதவர்கள், முகக் கவசம் அணியாதோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடகக்கு மாகாணத்தில் கோரோனா பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உயர்மட்டக் கூட்டம் மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இன்று முற்பகல் இடம்பெற்றது.

நாட்டில் கோரோனா தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் வட மாகாணத்தில் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை சுகாதார நடைமுறைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி, பொலிஸ் உள்ளிட்ட அனைத்துத் துறையினரும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் நெடுங்கேணியில் ஏற்பட்ட தொற்று நிலை காரணமாக அவர்களுடன் தொடர்புடையோரை தனிமைப்படுத்த போதுமான இடவசதி இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் வடக்கில் இரண்டு சம்பவங்களால. கோரோனா பரவல் அச்சநிலை காணப்படுவதாக அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

கோரோனா தொற்று தொடர்பில் தேடப்பட்டவர் மன்னாரில் வந்து நடமாடியமை மற்றும் தென்னிலையில் தனிமைப்படுத்தல் இடங்களிலிருந்து வருகை தந்து தம்மை வெளிப்படுத்தாமல் இருப்போரால் அச்சுறுத்தல்

உள்ளது என்று கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கோரோனா வைரஸ் தொற்று நிலை கட்டுபாட்டுக்குள் உள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் கோரோனா தோற்று பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய் தடுப்புத் தொடர்பான கட்டளைச் சட்டம் தொடர்பான வர்த்தமானியை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர், பொலிஸாருக்குப் பணித்தார்.